**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.20/2016

Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : செல்லத்துரை | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : முனியாண்டி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

22.06.2026

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).
(எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்).

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ஒப்புதல் வாக்குமூலத்தில் கிராம நிர்வாக அதிகாரி அழைத்ததன்பேரில் தான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் ஸ்டேட் பேங்க் அருகில் வைத்து கையொப்பமிட்டேன். மொத்தம் எத்தனை கையொப்பம் செய்தேன் என்றால் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் 2 கையொப்பமிட்டேன். மேற்படி அத்தாட்சியில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். என்ன எழுதியிருந்தது என்றால் மூன்று 10 ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்டது அது குறித்து எழுதப்பட்டிருந்தது. ஒப்புதல் வாக்குமூலத்தில் மொத்தம் எத்தனை பக்கங்களில் எழுதப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2) ஒப்புதல் வாக்குமூலம் யார் எழுதினார்கள் என்று தெரியுமா என்றால் போலிசார் எழுதினார்கள் எழுதியவர் பெயர் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதிய காவலரின் பதவி தெரியுமா என்றால் அவர் ஏட்டைய்யா. கைப்பற்றப்பட்ட நகைகள் எத்தனை என்று எனக்கு தெரியுமா என்றால் 5 பவுன் டாலர் செயின் ஒன்றும், 3 பவுன் பதக்க சங்கிலி ஒன்றும், ஒரு ஜோடி தோடு ஒரு பவுன், ஜிமிக்கி தோடு ஒருபவுன் ஒரு ஜோடி, அரைபவுன் மோதிரம் ஒன்றும்,

1/4 பவுன் மோதிரம் இரண்டு மற்றும் இரண்டு ஜோடி கொலுசு ஆகும். மேற்படி நகைகள் எங்கு கைப்பற்றப்பட்டது என்றால் பேரையூரில் உள்ள சோசைட்டிக்கு அருகே உள்ள முள் புதரிலிருந்து கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்டவுடன் அத்தாட்சி எழுதப்பட்டதா என்றால் இல்லை பேரையூர் காவல்நிலையத்திற்கு எடுத்து செல்லப்பட்டு அங்கு வைத்து தான் தயாரிக்கப்பட்டது. மேற்படி முள்புதரில் கைப்பற்றப்படவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து தான் அத்தாட்சி தயாரிக்கப்பட்டு அங்கு வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

3) போலிசார், கிராமநிர்வாக அதிகாரி, என்னையும் தவிர நகைகள் கைப்பற்றியபோது அங்கு வேறு யாரும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி பேரையூர் காவல்நிலையத்தில் வைத்து தான் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நகையின் எடைகளை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் எதிரி தான் கூறினார். நான் முதலில் பேரையூர் காவல்நிலையத்திற்கு சென்றேனா அல்லது சோசைட்டிக்கு சென்றேனா என்றால் முதலில் சோசைட்டிக்கு சென்ற பின்னர் தான் காவல்நிலையத்திற்கு சென்றேன். நான் பேரையூர் காவல்நிலையத்திற்கு செல்வதற்காக எனது மேலதிகாரியிடமிருந்து ஒப்புதல் சீட்டு பெற்றேனா என்றால் இல்லை.

4) நான் பேரையூர் காவல்நிலையத்திற்கு எவ்வாறு சென்றேன் என்றால் அனைவரும் காவல் வாகனத்தில் தான் சென்றோம். நான் காவல்நிலையத்தில் வைத்து தான் அனைத்து ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும், எதிரியிடமிருந்து எந்தவிதமான ஒப்புதல் வாக்குமூலம் பெறவல்லை என்றாலும் நகைகள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் போலிசார்கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.